# மணவாட்டியைத் தெரிந்துகொள்ளுதல்

## 2

சகோ. பிரன்ஹாம் அவர்களின் மேற்கோள்கள்

(படங்களுடன்)

எந்த ஒரு விசுவாசியும் ஒரு அவிசுவாசியை எக்காரணத்தைக் கொண்டும் விவாகம் செய்து கொள்ளக்கூடாது. எப்பொழுதுமே விசுவாசியை மணந்து கொள்ளவேண்டும்



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

## செய்தி: தேவனை குறித்து நிச்சயமுடையவர்களாயிருங்கள்
*59-0125*

எந்த ஒரு விசுவாசியும் ஒரு அவிசுவாசியை எக்காரணத்தைக் கொண்டும் விவாகம் செய்து கொள்ளக்கூடாது. எப்பொழுதுமே விசுவாசியை மணந்து கொள்ளவேண்டும்.

ஆனால் ஆகாபோ இப்பொல்லாங்கான செயலைப் புரிந்தான். யேசபேல் ஒரு அழகான பெண் என்பதில் ஐயமில்லை. அவளுடைய

அழகைக்கண்டு அவன் மயங்கினானேயன்றி, அவளுடைய உண்மையான தன்மையைக் கண்டல்ல. அது... இந்நாள் வரை அநேகர் அத்தவறை செய்து வந்துள்ளனர்.

அவள் தேசத்தில் ஜனங்களிடையே விக்கிரகாராதனையைக் கொணர்ந்தாள். ஜனங்கள், ஆசாரியர்கள், போதகர்கள் இவ்வனைவருமே மக்களால் பொதுவாக விரும்பி உரிமை கோரப்படும் (Popular demand) இந்த செயலுக்கு இரையாயினர்.

★★★★★

# உங்களால் கூடுமானவரையில் அவர்களை கிறிஸ்தவ சகாக்களுடன் வைத்திருங்கள்






## வில்லியம் மரியன் பிரன்ஹாம்

---

## செய்தி: **கேள்விகளும் பதில்களும்**

*64-0830*E

---

**சகோ. பிரான்ஹாமே, பதின்மூன்று வயதுக்குட்பட்ட நமது பிள்ளைகள் எந்தவிதமான செயல்களில் பங்கெடுக்கலாம்? மேலும், அவர்கள் தங்கள் சகாக்களைத் தேர்ந்தெடுக்க நாம் எந்த வகையில் அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும்?**

உங்களால் கூடுமானவரையில் அவர்களை கிறிஸ்தவ

சகாக்களுடன் வைத்திருங்கள். அவர்களை - அது பெண்ணாக இருந்தால், அவளை கிறிஸ்தவ பெண்களுடன் வைத்திருங்கள்; அது கிறிஸ்தவ பையன்களாக இருந்தால், கிறிஸ்தவ பையன்களுடன் வைத்திருங்கள்.



# அது மகிமையில் நித்திய துணைவன் அல்லது துணைவியாக இருக்கும்



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

# செய்தி: இனத்தான் மீட்பர் 60-1002

நேற்று காலை நாங்கள் படுக்கையை விட்டு எழுந்திருக்க தாமதமாயிற்று. பிள்ளைகளுக்கும் நேற்று பள்ளிக்கூடம் இல்லை. நாங்கள் வெவ்வேறு காரியங்களைக் குறித்து பேசிக் கொண்டிருந்தோம். அவைகளில் ஒன்று... "வெறுப்பு என்பது என்ன?"

நான் "வெறுப்பு என்பதற்கு ஒரு தொடக்கம் உண்டு, எனவே அதற்கு ஒரு முடிவு இருக்க வேண்டும். ஆனால் அன்புக்கோ

தொடக்கம் இல்லை, எனவே அதற்கு முடிவும் இல்லை. வெறுப்பு காலாகாலங்களில் இருக்க வகையுண்டு. ஆனால் அன்பு நித்தியமானது. வெறுப்பு தொடங்கி முடிவு பெறுகிறது. அன்புக்கு தொடக்கம் இல்லாததால் அது முடிவு பெறுவதில்லை” என்றேன். பாருங்கள்? அது நித்தியமானது.

ஒரு ஆண் அழகுக்காக ஒரு பெண்ணை மணக்கும்போது, அதற்கு ஒரு முடிவு இருக்கும். ஆனால் அவன் தன்னை அறியாமலேயே ஒருத்தியிடம் அன்புக் கொள்ளும் போது, அதே போன்று அவளும், அவனுடைய

தோற்றம் எப்படியிருந்தாலும் அவனிடம் அன்பு கொள்ளும்போது, அவன் அவள் மீது அன்பு கொள்கிறான், அவளும் அவன் மீது அன்பு கொள்கிறாள். அது மகிமையில் நித்திய துணைவன் அல்லது துணைவியாக இருக்கும்... மரணமோ அல்லது வெறெதுவும் அவர்களைப் பிரிக்க முடியாது. ஏனெனில் அவர்கள் நித்தியத்திலிருந்து வந்தவர்கள். அவர்கள் காலம் என்பதற்குள் காலடி வைத்து மறுபடியும் நித்தியத்திற்கே திரும்பிச் சென்று விடுகின்றனர். நித்தியம் என்பது காலம் என்னும் சரீரத்தில் கீழே

விழுந்து, மறுபடியும் மேலே நித்தியத்துக்கு சென்றுவிடுகிறது. அது ஒருக்காலும் அழியாது.

ஒரு அழகுள்ள ஸ்திரீ, அந்த அழகு நிச்சயமாக குறைந்து விடும். நீங்கள் அதற்கு சில ஆண்டுகள் அளிக்கலாம். ஒருக்கால் இன்றைக்கு அவள் அரை நிர்வாணியாய் தெருவில் உடலை நெளித்து நடந்து சென்று நாட்டில் உள்ள எல்லா மதுக்கடைகள் அனுப்புவதைக் காட்டிலும் அதிக ஆத்துமாக்களை நரகத்துக்கு அனுப்பக்கூடும். அவள் அப்படி உடலை நெளித்து நடக்கும்போது தான் யாரோ என்னும் உணர்வு

அவளுக்கு இருக்கக்கூடும். *“அவர்கள் கழுத்தை நெறித்து நடந்து, ஒய்யாரமாய் நடப்பார்கள்”* என்று வேதம் கூறுகிறது. (ஏசா.3:16) வேத வசனங்களை நிறைவேற்றிக்கொண்டு, அதே சமயத்தில் அதை அறியாதிருக்கிறார்கள். அவர்கள் சீர்கேடான உடைகளை அணிந்து முற்றத்தில் நின்று கொண்டிருப்பார்கள். மனிதர் அவளை உற்றுப் பார்த்துக் கொண்டிருப்பர். அதை அவர்கள் அறியாதிருப்பர். அவள் தன் புருஷனுக்கோ அல்லது தன் சிநேகித பையனுக்கு (boy friend)

மிகவும் உத்தமியாக-கற்புள்ளவளாக இருந்திருக்கலாம். ஆனால் நியாயத் தீர்ப்பின் நாளில், நூற்றுக்கணக்கான ஆண்களுடன் அவள் விபச்சாரம் செய்ததற்கு பதில் சொல்லியாக வேண்டும். அவர்கள் மேல் ஒரு ஆவி தங்கியுள்ளதை அவர்கள் அறியாமலிருக்கிறார்கள். *"நிர்வாணியும், குருடாயும் இருப்பதை அறியாமலிருக்கிறாய்"* என்று வேதம் கூறுகிறது. பரிதாபமான பாகம் என்னவெனில், அதை அறியாமலிருப்பதே.

தேவன் அந்த பெண்ணுக்கு அளித்த அழகிய உருவம் கொண்ட

அந்த உடல், அடுத்த ஞாயிறுக்குள் அழுகிப் போக வகையுண்டு என்று உங்களுக்கு தெரியுமா? உயரமான, கறுத்த அழகிய தேகக்கட்டு கொண்ட மனிதன் ஞாயிறுக்குள் குப்பை கூளமாக ஆக வகையுண்டு. இவையனைத்தும் அழிந்து போகும்.

ஆனால் உள்ளே இருக்கின்ற அது, தேவன்-அன்பு, நித்திய காலமாய் வாழ்கின்றது. எனவே உள்ளேயுள்ளதன் பேரில் கவனம் செலுத்துங்கள். அந்த நோக்கத்தின் மேல் உங்கள் கண்களை வையுங்கள்.

★★★★★

அது அங்கேயுள்ள தேவனிடம் கொண்டிருக்கிற அன்போடு கூடிய ஒரு இருதயத்திலிருந்து வரவில்லை என்றால், அது ஒருபோதும் எங்குமே போகவே போகாது




**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**

# செய்தி: உன் வீட்டார்,

ஆகஸ்டு 8, 1961
வீட்டுக் கூட்டம், டிஃப்டன்,
ஜார்ஜியா, அமெரிக்கா

58. நான் என்னுடைய மனைவியை எவ்வளவாக நேசித்தேன் என்று நான் அன்றொரு நாள் அவளிடம் கூறிக் கொண்டிருந்தேன். ஆகையால், நான் இதைக் குறித்து பேச அவள் விரும்புகிறாள் என்று நான் நினைக்கவில்லை, ஆனால் நான் தனிப்பட்ட முறையில் அதைக் கூறினேன். எனவே என்னால்

இப்பொழுது வெளிப்படையாக அதைக் கூற முடியும் என்று நினைக்கிறேன். நான் அவளை எவ்வளவாக நேசித்தேன் என்றும், முதலாவது துவக்கம் முதற்கொண்டு நான் எப்போதுமே எவ்வளவாக அவளை நேசித்து வருகிறேன் என்றும் நான் அவளிடம் கூறிக் கொண்டிருந்தேன். நான், "அது எந்த வித்தியாசத்தையும் உண்டுபண்ணுவதில்லை..." என்றேன்.

59. அவள், "ஓ, பில்" என்றாள், அவள் எவ்வளவு... என்று கூறினாள். அவள் எப்படி பெருத்து (fat) வருகிறாள் என்பதைக் குறித்தும், அவளுடைய தலைமுடி

நரைத்துக் கொண்டிருப்பதைக் குறித்தும் தான் பேசிக் கொண்டிருந்தாள்.

நான், “தேனே, நீ அவ்வளவு பருமனாகவும், தலைமுடியே இல்லாமலும் இருக்கலாம், நான் அப்பொழுதும் இதேவிதமாகவே உன்னை நேசிப்பேன்” என்றேன். பாருங்கள்? ஏனென்றால் நீங்கள் யாரோ ஒருவரை நேசித்து, நீங்கள்-நீங்கள் அந்த நபரை சந்திக்க வேண்டுமானால், அங்கே ஏதோவொன்று சம்பவித்தாக வேண்டும். அந்த நபர் வேறொரு நபரை நேசித்தாலொழிய...

60. விவாகமாகாத வாலிப பெண் பிள்ளைகளே, இது உங்களுக்காகத் தான், (பாருங்கள்?) வாலிபர்களே, நீ நேசிக்கும் அந்த வாலிப பெண்ணை நீ சந்திக்கும் போது. அங்கே ஏதோவொன்று உள்ளது, நீ அவளை நேசிக்கிறாய் என்பது உனக்குத் தெரியும், அங்கே அதற்கு வேண்டியதெல்லாம் அவ்வளவு தான், அல்லது நீ அவனை நேசிக்கிறாய், அவன் அழகானவன் என்றோ அல்லது அவனுக்கு அழகில்லை என்றோ, அல்லது அவள் அழகானவள் என்றோ அல்லது அழகில்லாதவள் என்றோ நீங்கள் கவலைப்படுவதில்லை. அது காரியமில்லை, ஆனால் நீங்கள்

அதேவிதமாகவே அவர்களை நேசிக்கிறீர்கள். இப்பொழுது, நீங்கள் எச்சரிக்கையோடு இருப்பது நல்லது. நீங்கள் ஒருவிதத்தில் அங்கே அருகாமையில் இருக்கிறீர்கள், ஏனென்றால் அது - நீங்கள் அங்கேயிருக்கும் வீட்டிற்கு அருகாமையில் வந்து கொண்டிருக்கிறீர்கள்.

நான்... அது... அதற்கு வெளியே சார்ந்து, செய்யப்படும் ஒரு-ஒரு விவாகம் நிச்சயமாக விழுந்து போகும், அல்லது அது ஒருபோதுமே வெற்றிகரமாக இருக்காது. அவைகள் ஒருபோதும் சந்தோஷமாக இருக்கவே இருக்காது.

61. இப்பொழுது, நான் கூற விரும்புகிற ஒரு காரியத்திற்கு கொண்டு வரும்படி தான் நான் அதைக் கூறினேன்.

நண்பர்களே, அதே காரியத்திற்கு வெளியே ஏற்படும் ஒரு மனமாற்றமும் நீடித்து நிற்காது. அது தொடர்ந்து நீடித்து நிற்காது. நீங்கள் சபைக்குச் சென்று, நீங்கள், "நல்லது, நான் சபையைச் சேர்ந்து கொள்ளப் போகிறேன், நான் ஞானஸ்நானம் பண்ணப்படப் போகிறேன்" என்று கூறும் போது, **அது அங்கேயுள்ள தேவனிடம் கொண்டிருக்கிற அன்போடு கூடிய ஒரு இருதயத்திலிருந்து வரவில்லை**

**என்றால், அது ஒருபோதும் எங்குமே போகவே போகாது**. நீங்கள் வெறுமனே... நீங்கள் செய்வதெல்லாம் சபையைச் சேர்ந்து கொண்டு, ஞானஸ்நானம் பண்ணப்படுவது தான்.

ஆனால் நீங்கள் கிறிஸ்துவுக்குள் மனமாற்றமடைந்து, கிறிஸ்துவை நேசிக்கும் போது, நீங்கள் உங்கள் மனைவியையோ அல்லது உங்கள் கணவரையோ நம்புவது போன்று, நீங்கள் கிறிஸ்துவின் மேலுள்ள உங்கள் விசுவாசத்தை அதிகரித்துக் கொள்கிறீர்கள். நீங்கள் அந்த விசுவாசத்தில் நடக்கும்படியான ஒரு விசுவாசத்தை சேர்த்து அதிகரித்துக் கொள்கிறீர்கள். எனக்குத் தெரியாது,

நீங்கள் அப்படியே - உங்களைக் குறித்து ஏதோவொன்றுள்ளது, அங்கே உங்களை நங்கூரமிடும் ஏதோவொன்றை நீங்கள் பெற்றிருக்கிறீர்கள். நீங்கள் பாருங்கள்?

62. நல்லது, கிறிஸ்துவைக் குறித்தும் அதேவிதமாகத்தான். கிறிஸ்து என்ன கூறுகிறாரோ, அதை நீங்கள் விசுவாசிக்கிறீர்கள். நீங்கள் சரியாக அதனோடு தரித்திருக்கிறீர்கள். அந்த விதமாகத்தான்... அது உங்களை அதற்கு மேலாக உயர்த்துகிறது, தேவன் அதை சம்பவிக்கப் பண்ணி, “நீ கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசித்தால், நீயும்

உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள்" என்ற தமது வாக்குத்தத்தத்தை நிறை வேற்றுகிறார்.

எனவே இப்பொழுது, நான் இதைக் கூற வேண்டுமென்று சற்று முன்பு தான் நினைத்தேன். நான்- நான் அதற்காக மிக அதிக நேரம் எடுத்துக் கொண்டு விட்டேன். அதைக் கூறுவதற்கு முப்பது நிமிடங்கள் எடுத்துக் கொண்டேன், ஆனால் நான் என்ன கூற விரும்பினேன் என்பதை இப்பொழுது நீங்கள் அறிந்து கொண்டீர்கள். அதுதான் அதுவாக உள்ளது.

★★★★★

உங்கள் விவாக பொருத்தனை புனிதமானது; அது தான் உங்களை விவாகம் செய்து வைக்கிறது



## வில்லியம் மரியன் பிரன்ஹாம்

---

# செய்தி: கேள்விகளும் பதில்களும் 64-0823E

---

**சகோ.பிரான்ஹாமே, ‘ஆனல்மெண்ட்’ என்னும் சொல்லில் பொருள் என்ன? ஜனங்கள் விவாகம் செய்து கொள்ள சுயாதீனம் பெறுகின்றனரா? அல்லது இது விவாகரத்தைக் குறிக்கும் மற்றொரு சொல்லா? இதன் பேரில் சில தகவல் அறிய விரும்புகிறேன்.**

நிச்சயமாக அவர்கள் விவாகமானவர்களே, அவர்கள்

பொருத்தனை செய்து கொண்ட வரைக்கும் அவர்கள் விவாகமானவர்களே. உதாரணமாக, ஒரு பையன் ஒரு பெண்ணை விவாகம் செய்து கொள்வதாக நல் விசுவாசத்துடன் வாக்கு கொடுத்திருந்தால், அவன் அந்த பெண்ணை விவாகம் செய்ய கடமைப்பட்டிருக்கிறான். அவன் அவளை விவாகம் செய்து கொண்டதற்கு சமானம். நாட்டின் சட்டம் செய்கின்ற ஒரே காரியம் என்னவெனில், நீங்கள் சட்டத்துக்குப் புறம்பாக கணவனும் மனைவியுமாக வாழ்வதற்கு பதிலாக, நீங்கள் ஒன்றாக

வாழ்வதற்கு அது உங்களுக்கு உரிமை பத்திரம் அளிக்கிறது. ஆனால் ஒரு மனிதன் ஒரு ஸ்திரியீடம், "நான் உன்னை விவாகம் செய்து கொள்வேன். தேனே; உன்னை என் மனைவியாக ஏற்றுக் கொள்வேன். நீ என்னை ஏற்றுக் கொள்வாயா?" என்று கேட்டால் அவன் விவாகமானவன்.

உங்கள் விவாக பொருத்தனை புனிதமானது; அது தான் உங்களை விவாகம் செய்து வைக்கிறது. எந்த பிரசங்கியும் எந்த மாஜிஸ்ட்ரேட்டும் அல்லது எவருமே உங்களை விவாகம் செய்து வைக்கிறதில்லை; நீங்கள் தேவனுக்கும் இந்த

மனிதனுக்கும் செய்யும் பொருத்தனையே விவாகம் செய்விக்கிறது. நீங்கள் வாக்கு கொடுக்கும் போது, உங்களுக்கு விவாகமாகி விடுகிறது.

பாருங்கள் நீங்கள், “சகோ.பிரான்ஹாமே, அது சரி தானா? நீங்கள் வேதத்தைக் கொண்டு மாத்திரமே பதில் சொல்வீர்கள் என்று கூறுனீர்களே” எனலாம். அதைக் குறித்த வேத ஆதாரம் உங்களுக்கு வேண்டுமா? வேண்டுமானால், உங்கள் கரங்களை உயர்த்துங்கள். இப்பொழுது நமக்கு ஆறு அல்லது எட்டு நிமிடங்கள் உள்ளன. சரி.

யோசேப்பு, அவளுடைய புருஷன் நீதிமானாயிருந்த படியால் (அவளுடைய புருஷனாக அவன் நியமிக்கப்பட்டிருந்தான். ஆனால் அவன் ஏற்கனவே அவளுடைய புருஷன் என்று அழைக்கப்பட்டான்)... “யோசேப்பு நீதிமானாயிருந்து, அவளை அவமானப்படுத்த மனதில்லாமல் இரகசியமாய் தள்ளி விட யோசனையாயிருந்தான். அவர்கள் கூடி வருமுன்னே, அவள் பரிசுத்த ஆவியினாலே கர்ப்பவதியானாள் என்று காணப்பட்டது. (பாருங்கள்?) கர்த்தருடைய தூதன் சொப்பனத்தில் அவனுக்குக்

காணப்பட்டு: தாவீதின் குமாரனாகிய யோசேப்பே, உன் மனைவியாகிய மரியாளைச் சேர்த்துக் கொள்ள ஐயப்படாதே என்றான்" (மத். 1:19,20). அவனுக்கு ஏற்கனவே விவாகமாகி விட்டது. அவன் ஏற்கனவே அவளுக்கு வாக்குக் கொடுத்தாகி விட்டது.

மற்றும் ... சிறு பெண்ணே. அந்த பையனை விவாகம் செய்து கொள்வதாக நீ வாக்கு கொடுத்திருந்தால், அதை செய்ய நீ கடமைப்பட்டிருக்கிறாய். அந்த கடமைக்கு பிறகு, நீ வேறோருவனை விவாகம் செய்து கொண்டால் - இப்பொழுது முதல்

அதை நீ எப்படியும் செய்வாய் - நீ விபசாரத்தில் வாழ்கிறவளாயிருப்பாய். கவனி, ஒரு பையன் ஒரு பெண்ணை விவாகம் செய்து கொள்வதாக வாக்கு கொடுத்திருந்தாலும், அதே காரியம் தான்.

நீங்கள் கைக்கொள்வதாக இருந்தால் மாத்திரமே நீங்கள் வாக்கு பண்ணுங்கள், இல்லையென்றால் யாருக்கும் வாக்கு கொடுக்காதீர்கள். அதற்கு வேத ஆதாரம் உண்டேன்பதை ஞாபகம் கொள்ளுங்கள். யோசேப்பு மரியாளை விவாகம் செய்து கொள்வதாக வாக்கு

கொடுத்திருந்தான். அதுதான் விவாகமான நிலை என்பதாக தேவன் கூறினார்.

அதைக் குறித்த பழைய ஏற்பாட்டு பிரமாணத்தைப் படியுங்கள். பாருங்கள்? பழைய ஏற்பாட்டு பிரமாணத்தின்படி நீங்கள் ஒரு பெண்ணை மணந்து கொள்வதாக வாக்கு கொடுத்து விட்டு, வேறொருத்தியை மணந்து கொண்டால், நீங்கள் விபச்சாரம் செய்பவராகி விடுகிறீர்கள். அது உங்களை பாளயத்திலிருந்து புறம்பாக்கும். ஆம், ஐயா? ஒரு பெண்ணுக்கு நீங்கள் வாக்கு கொடுத்தால், அதை நிறைவேற்ற

வேண்டும். அவள் புனிதமான சிறு பாண்டம். அது உலகிற்கு ஒரு குழந்தையை கொண்டு வர வேண்டியதாயுள்ளது. எனவே நீங்கள் அவளுக்கு வாக்கு கொடுக்கும்போது, அவளை நீங்கள் விவாகம் செய்து கொள்ள வேண்டும்.

★★★★★

# அவர்கள் பிள்ளைகளை கிறிஸ்துவினிடம் நடத்தாததே அவர்கள் செய்யும் பெரியத் தவறு



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

செய்தி:

# ஒன்றாயிருத்தல்

*62-0211*

அது மாத்திரமல்ல, கணவனுக்கும் மனைவிக்குமிடையே இருந்த அந்த ஒன்றாயிருந்தால் முடிவடைந்தது. கணவனுக்கும், மனைவிக்கும் தேவனுக்குமிடையே அந்த இணைப்பு இல்லாமல் போனால் எந்த ஒரு மணவாழ்க்கையும் அது இருக்க வேண்டிய விதத்தில் இருக்க முடியாது என்பது என் கருத்து. அது உண்மை. அந்த

இணைப்பு இல்லாமல் போனால் அவர்கள் உலகில் பிள்ளைகளைப் பெற்றெடுத்து அவர்களை முறை தவறினவர்களாக்கி, அவர்களுக்கு சிகரெட் விஸ்கி போன்றவைகளைக் கொடுத்து, அவர்களுக்கு முன்னாள் சீட்டு விளையாடி மது அருந்துவார்கள். அவர்கள் தங்கள் விவாக பொருத்தனைக்கு எவ்வளவு உண்மையாயிருந்த போதிலும், அது உடலுறவு சம்பந்தமானது. அது மாம்சம். ஆனால் அங்கு ஒரு ஆவி உள்ளது. பாவியாகிய அப்பாவின் அம்மாவின் ஆவி. அவர்கள் எவ்வளவு தான் தங்கள்

பிள்ளைகளுக்கு உண்மையாயிருந்த போதிலும், அந்த இணைப்பு தவறாகவே இருக்கும்.

நீங்கள், "தங்கள் பிள்ளைகளுக்கு அதை கற்றுக் கொடுக்காத மனிதரையும் ஸ்திரீகளையும் நான் அறிவேன். அவர்கள் கிறிஸ்தவர்கள் அல்ல" எனலாம். அவர்கள் பிள்ளைகளை கிறிஸ்துவினிடம் நடத்தாததே அவர்கள் செய்யும் பெரியத் தவறு - கிறிஸ்துவினிடம் நடத்தாதது, பாருங்கள். அது இல்லாமல் உங்களால் சரியான இணைப்பை பெற முடியாது. ஐக்கியம் முறிந்து விடுகிறது.

அதற்கு ஒரே வழி மாத்திரமேயுண்டு. இயேசு கிறிஸ்துவே அதற்கு பதில். வேறெதுவும் நன்மை செய்யாது



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

# செய்தி: விளங்காத சத்தம் 60-1218

வீட்டு வாழ்க்கையை நாம் எடுத்துக் கொள்வோம். அதுவும் நிச்சயமற்றதே. நமது ஸ்திரீகளை நல்லொழுக்கத்துக்கு என்ன நேர்ந்ததென்று எனக்குத் தெரியவில்லை. விவாகரத்து பெருகி வருகின்றது. அது மிகவும் பயங்கரமானது. விவாகரத்து நீதிமன்றங்களில் ஜனநெருக்கம் அதிகமுள்ளது. பையன்களும் பெண்களும் மணம் புரிந்து ஒன்றாக வாழ்ந்து இரண்டு மூன்று

குழந்தைகளைப் பெறுகின்றனர். அதன் பிறகு அவர்கள் பிரிந்து போய் வேறொருவனை அல்லது வேறொருத்தியை மணம் புரிகின்றனர், மணம் புரிகின்றனர், மணம் புரிகின்றனர். அவர்களுடைய குடும்ப நிலை?

அன்றொரு நாள் நான் மிகவும் எளிய ஒருவர் வீட்டுக்கு சென்றிருந்தேன். அந்த மனிதன், “நான் வருமானத்துக்கு மிஞ்சின செலவு ஏற்படாமல் எப்படி சமாளிக்கப் போகிறேனோ” என்றார்.

நான் சுற்றும் முற்றும் பார்த்தேன். அவர் பாடுபட்டு

வேலை செய்தார். அவருக்கு மிகவும் உத்தமமான ஒரு மனைவி இருந்தாள். தரையில் அழுக்கு படிந்த முகத்துடன் நான்கு அல்லது ஐந்து பிள்ளைகள் உட்கார்ந்து கொண்டிருந்தனர். நான், "நீர் ஒரு கோடீஸ்வரன்" என்றேன்.

அவர், "ஹூ! நல்லது, சகோ. பிரான்ஹாம். உமது சொற்களை நான் மறுத்து கூறமாட்டேன். சகோதரனே, என்னிடம் ஒரு பைசா கூட இல்லை" என்றார்.

நான் அவரிடம், "ஆனால் பணம் வாங்க முடியாத ஒன்றை நீங்கள் பெற்றிருக்கிறீர்கள். இங்குள்ள உங்கள் மனைவிக்கு

உடுக்க ஒருக்கால் இரண்டு உடைகள் கூட இல்லாமல் இருக்கலாம். அதுவும் வேறு யாரோ அவளுக்கு கொடுத்தது. ஏனெனில் உமக்கு எப்பொழுதாவது ஒரு நாளைக்கு மாத்திரம் வேலை கிடைக்கிறது. ஆனால் அவளைப் பாருங்கள், அவள் எவ்வளவாக உமக்கு உத்தமமுள்ளவளாய் இருக்கிறாள் என்று. இன்றைக்கு வீட்டிற்கு அப்படிப்பட்ட ஒரு மனைவியிடம் வருவதற்கு தங்கள் கடைசி காசையும் செலவழிக்க எத்தனையோ கோடீஸ்வரர்கள் ஆயத்தமாயிருக்கிறார்கள்.

அவனுடைய மனைவி ஒரு கூட்டம்

மனிதருடன் மது அருந்தும் ஸ்தலத்தில் மது அருந்தி, கொஞ்சி விளையாடி, ஆடிப்பாடி, புகைப்பிடித்து, இரவில் அவர்களுடன் காரில் சென்று கொண்டிருக்கிறாள். இருப்பினும் அவன் அவளை நேசிக்கிறான். அவன் என்ன பெற்றிருக்கிறான் என்பதைப் பாருங்கள். அவனுடைய வாழ்க்கை முழுவதுமே அவளுடன் இணைக்கப்பட்டிருக்கும்போது, அவள் எப்படி நடந்து கொள்கிறாள் என்பதைப் பாருங்கள்" என்றேன்.

அவ்வாறே மனிதரும் ஸ்திரீகளும் செய்கின்றனர். பாருங்கள், அவர்கள்

இருவருக்குள்ளே இவ்விஷயத்தில் எவ்வித வித்தியாசமும் இல்லை. எல்லாமே பாவத்தின் தொகுப்பு என்னும் நிலைக்கு இப்பொழுது வந்து விட்டது. வீட்டில் ஒரு பெண் தன் பிள்ளைகளைப் பேணி வளர்த்து, அதே சமயத்தில் அவளுடைய கணவன் குடித்து வெறித்து, மற்ற பெண்களுடன் சல்லாபம் செய்தால், அவளிடம் கோடிக்கணக்கான டாலர்கள் இருக்குமானால், அவளுடைய கணவனை சீர்படுத்த அவள் என்ன செய்வாள்? அதற்கு ஒரே வழி மாத்திரமேயுண்டு. இயேசு கிறிஸ்துவே அதற்கு பதில்.

வேறெதுவும் நன்மை செய்யாது. அது முடிவு காலத்தில் உள்ளது. அது கிறிஸ்து, கிறிஸ்து மாத்திரமே.

★★★★★

**மணமான பெண் என்னும் முறையில், பிள்ளைகளை வளர்க்கும் பொறுப்பு உங்களுக்குண்டு**



# வில்லியம் மரியன் பிரன்ஹாம்

---

## செய்தி: தேவனுடைய சமுகத்திலிருந்து விலகி ஓடிப்போகும் ஒரு மனிதன் 65-0217

---

நாம் செய்ய வேண்டிய காரியங்கள் அநேகம் உண்டு. நாம் சந்திக்க வேண்டிய பொறுப்புகள் அநேகம்.

ஒவ்வொருவரும் ஒரு குறிப்பிட்ட பொறுப்பை சந்திக்க வேண்டியவர்களாயுள்ளனர்.



உங்கள் மனைவியைத் தெரிந்து கொள்ளும் விஷயத்தில், அல்லது

கணவனைத் தெரிந்து கொள்ளும் விஷயத்தில், உங்களுக்கு ஒரு பொறுப்பு உண்டு. பிறகு நீங்கள் ஞாபகம் கொள்ள வேண்டும்...






ஒருக்கால் நீங்கள் ஒரு வீட்டைக் கட்டலாம். அது ஒரு அழகான வீடு.



பிறகு ஞாபகம் கொள்ளுங்கள். மணமான பெண் என்னும் முறையில், பிள்ளைகளை வளர்க்கும் பொறுப்பு உங்களுக்குண்டு.





அந்த அழகான சுவர்களில் பிள்ளைகள் கைகளை வைத்து அவைகளை அழுக்காக்காதபடிக்கு நீங்கள் பாதுகாக்க வேண்டும்.

உங்கள் பிள்ளைகளை படிக்க வைக்கும் பொறுப்பு உங்களுக்குண்டு.

அவர்களுக்கு உடுக்க உடைகளையும், உண்ண உணவையும் அளிக்க வேண்டிய பொறுப்பை நீங்கள் பெற்றிருக்கிறீர்கள்.



எல்லாமே பொறுப்பு தான். பொறுப்பை வகிக்காமல் அதை தள்ளி விடுவது மிகவும் எளிதான செயல்.

விவாகம் என்பது எல்லா விதங்களிலும் பொறுப்பு வாய்ந்தது என்று நாம் காண்கிறோம்.









~ 14 ~



★★★★★

# அருமையான பெண்மைக்குரிய ஆவி









# உபாகமம் 22:5

புருஷரின் உடைகளை ஸ்திரீகள் தரிக்கலாகாது, ஸ்திரீகளின் உடைகளைப் புருஷர் தரிக்கலாகாது; அப்படிச் செய்கிறவர்கள் எல்லாரும் உன் தேவனாகிய கர்த்தருக்கு அருவருப்பானவர்கள்.



# வில்லியம் மரியன் பிரன்ஹாம்

செய்தி: **ஆதியாகமத்தின் மீதான கேள்விகளும் பதில்களும்,** ஜூலை 29, 1953, ஜெபர்ஸன்வில், இந்தியானா, அமெரிக்கா

46. இப்பொழுது, ஆனால் நிலத்தை பண்படுத்துவதற்கோ, உழுவதற்கோ அங்கே மனிதன் இல்லை, ஆதியாகமம் 2, நிலத்தை பண்படுத்த எந்த மனிதனும் இல்லை. "அவர் மனுஷனை பூமியின் மண்ணினாலே உருவாக்கினார்" (ஆதியாகமம் 2:7). இப்பொழுது நாம் அதை கவனிப்போம், அவர் மனுஷனை பூமியின் மண்ணினாலே உருவாக்கி, இந்த இயற்கைக்கு மேம்பட்ட ஆவியை அவனுக்குள் வைத்தார்.....

47. இப்பொழுது, அவன் அங்கே படுத்துக்கிடந்தான். அதைக் குறித்த அநேக காட்சிகளை என்னால் எடுக்க இயலும். ஆதாம்

நிற்பதை என்னால் காண முடிகிறது... அதை நாம் இந்தவிதமாக எடுத்துக் கொள்வோம். ஒரு மரம் போல் அவன் நிற்பதாகப் பார்ப்போம். தேவன் அவனை உண்டாக்கினார். அவன் அப்படியே மரித்த நிலையில் கிடந்தான்; அவனுடைய பாதங்கள், நிலத்தில் வேர் ஒட்டிக் கொண்டிருப்பது போல இருந்தது. பிறகு தேவன், "உண்டாகக் கடவது" என்றார். அல்லது ஜீவ சுவாசத்தை அவனுக்குள் ஊதினார். பிறகு அவன் குதித்தெழுந்து வெளி வந்தான். அவன் ஒரு ... ஜீவசுவாசத்தை அவனுக்குள் ஊதினார். அவன் ஜீவாத்துமாவானான். இப்பொழுது அவன் அசையத் துவங்கினான்.



~ 5 ~



48. ஆகையால் பிறகு தேவன் அவனிலிருந்து ஒரு விலா எலும்பை எடுத்து ஒரு ஸ்திரீயை உண்டாக்கினார்.



இப்பொழுது, ஸ்திரீக்கான ஆவியை எங்கிருந்து எடுத்தார்? பாருங்கள்? அவர் தாமே... ஆதியாகமம் 1:26ல் அவர் கூறினார் "நமது சாயலாகவும் நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக, ஆணும் (மனிதன்) பெண்ணுமாக அவர்களை சிருஷ்டித்தார்.






அவர் பலமிகுந்த ஆவியை மனிதனுக்கு உண்டாக்கினார். அவர் மிருதுவும், எளிமையும்,

புலன்களுக்கு இனியதான, பெண்மையின் ஆவியை பெண்ணிற்கு உண்டாக்கினார்.



49. ஆகையால், ஒரு ஸ்திரீ மனிதனைப் போன்று நடப்பதை நீங்கள் கவனிப்பீர்களானால், அவள் ஆதியிலிருந்த தன் ஸ்தானத்தை விட்டு இடம் மாறிவிட்டாள். பாருங்கள்? அது சரி. அவள்...



ஸ்திரீ தன் புனிதமான, பெண்மைக்குரிய இடத்தை இழந்து போயிருப்பது வெட்கத்திற்குரியது என்று நான் எண்ணுகிறேன். அது ஒரு பெருத்த அவமானம். நான் கூறுகிறேன் அது... நான் இதைக் கூறுவேன் என்பதை நீங்கள் அறிவீர்கள்.





இப்பொழுது, இங்கிருக்கும் ஸ்திரீகளாகிய உங்களைக் குறித்து நான் கூறவில்லை,

பேசவில்லை. ஆனால், உண்மையில், அது உங்களைப் புண்படுத்தும், அது அவ்விதமே செய்யும்.



ஆனால் பாருங்கள், உங்களை ஒன்று நான் கேட்கட்டும். ஸ்திரீகள் அவ்வளவு பெண்மை தன்மை வாய்ந்தவர்களாய் இருந்திருந்தார்கள்.



ஒரு மனிதன் அவர்களிடம் சென்று பேசினால், ஹும்! அவர்கள் முகம் சிவந்து நாணம் கொள்வார்கள்.



எப்படியாயினும், நாணம் கொள்வதென்றால் என்ன? அநேக காலமாக அதை நான் காண்பதில்லை.



சில ஸ்திரீகள் நாணம் கொண்டாலும் கூட அது எனக்கு தெரியாமல் போகின்றது.

ஏனென்றால் நீண்ட காலமாக அதை நான் கண்டதில்லை, காண்பதில்லை.



அந்த மதிப்பிற்குரிய காரியத்தை அந்த அருமையான பெண்மைக்குரிய ஆவியை இன்னுமாய் அவர்கள் உடையவர்களாய் இல்லை. அவர்கள் ஒரு... அவர்களால்...



அவர்கள் மனிதனைப்போல உடையணிந்து கொள்கின்றனர். மனிதனைப் போன்று மயிரை வெட்டுகின்றனர்.



மனிதனைப்போல புகைப் பிடிக்கின்றனர், குடிக்கின்றனர், மனிதனைப் போல வக்கிரம்

கொள்கின்றனர், மனிதனைப்போல வாக்களிக்கின்றனர், மனிதனைப் போல வேலை செய்கின்றனர்.



கடினமாகி, வலுவாகி இன்னுமாய் இருக்கின்றனர். ஓ, என்னே! அது நீங்கள் எப்படி இருக்க வேண்டும் என்பதைக் காட்டுகிறது. முற்றிலும் சரி.



50. அப்படிப்பட்ட ஒரு ஸ்திரீயைக் காண்பதென்பது இப்பொழுது கடினமான ஒரு காரியமாகும். இன்னுமாக அதே போன்று காணமுடியாது. அது சரிதானே? ஆம். அது உண்மையாகும்.



ஆகையால் ஒரு ஸ்திரீ எழுந்து ஒரு மனிதனைப்போல வலுவுள்ளதாகவும், பெரியவளாகவும், இருக்கும்படி எண்ணப்படவில்லை.



ஏனென்றால் அவள் மதுரமுள்ள தன்மை கொண்டவள். தேவன் அவ்வாறேதான் அவளை உண்டாக்கினார்.

வேதவாக்கியங்களின் மூலமாக அதை என்னால் நிரூபிக்க முடியும். ஆம் ஐயா. அது சரி. ஆகையால்...

★★★★★

*(குறிப்பு: இந்தச் சிறு புத்தகத்திலுள்ள படங்கள் அனைத்தும் இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டுள்ளன. நன்றி.)*

# புருஷரின் உடைகளை ஸ்திரீகள் தரிப்பது தேவனுக்கு அருவருப்பானது





# உபாகமம் 22:5

புருஷரின் உடைகளை ஸ்திரீகள் தரிக்கலாகாது, ஸ்திரீகளின் உடைகளைப் புருஷர் தரிக்கலாகாது; அப்படிச் செய்கிறவர்கள் எல்லாரும் உன் தேவனாகிய கர்த்தருக்கு அருவருப்பானவர்கள்.



# வில்லியம் மரியன் பிரன்ஹாம்

---

செய்தி: **இனி வரப்போகும் காரியங்கள்,** டிசம்பர் 5, 1965, ரியால்டோ, கலிபோர்னியா, அமெரிக்கா

---

72. ஓ, சகோதரனே, சகோதரியே, நாம் வாழும் இவ்வுலகில் நீயும் நானும் தேவனுடைய குமாரரும் குமாரத்திகளுமாக நடந்து கொள்வோம்.

நாம் இங்கு அந்நியர். ஆனால் நம்முடைய நடத்தை, நாம் தேவனுடைய குமாரர் குமாரத்திகள் என்னும் நிலையில் தேவனுடைய கட்டளைகளுக்கு ஏற்றதாய் இருக்கவேண்டும்.

தேவன் நமக்கு வகுத்துள்ள பிரமாணத்தின்படி நமது நடத்தை, நாம் புரியும் செயல்கள் அனைத்தும் அமைந்திருக்கவேண்டும்.



புருஷரின் உடைகளை ஸ்திரீகள் தரிப்பது தேவனுக்கு அருவருப்பானது. ஒரு ஸ்திரீ தன் தலைமயிரைக் கத்தரித்துக் கொள்ளுதல் தவறானதும் பாவமான செயலுமாகும். வேதம்

அவ்வாறு கூறியுள்ளது. அவள் ஜெபிக்கவும் கூடாது.

நீங்கள், “அதனால் என்ன?” எனலாம்.



73. அண்மையில் பிரபல போதகர் ஒருவர் என்னிடம் வந்து, “சகோ. பிரன்ஹாமே, வாருங்கள், உங்கள் மேல் நான் கைகளை வைக்க விரும்புகிறேன். உங்கள் ஊழியத்தை நீங்கள் பாழாக்கிக் கொள்ளப் போகின்றீர்கள்” என்றார்.

நான், “ஏன்?” என்றேன்.

அவர், “பெண்களை நோக்கி நீங்கள் எப்பொழுதும் கூச்சலிட்டுக் கொண்டிருக்கிறீர்களே” என்றார்.

“நான் உண்மையைத் தானே...” என்றேன்.





அவர், “ஓ, அது எனக்குத் தெரியும். நானும் ஒரு பெந்தெகொஸ்தேயினன்.

பெண்கள், அவர்கள் இப்பொழுது செய்வது போல், குட்டை தலைமயிர் வைத்துக்கொள்ளக் கூடாது, ஆண்களின் கால்சட்டைகளை அணியக்கூடாது. முகங்களில் வர்ணம் தீட்டக் கூடாதென்று எனக்குத் தெரியும். அவர்கள் அப்படி செய்யக் கூடாததுதான். ஆனால் வியாதியஸ்தருக்கு ஜெபிக்கவே தேவன் உங்களை அழைத்திருக்கிறார்" என்றார்.



"சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவே அவர் என்னை அழைத்தார்" என்றேன். பாருங்கள்? அவர், "அது எனக்குத் தெரியும். ஆனால் நீங்கள் நினைக்கிறீர்களா..." என்று கேட்டார்.



நான், "உங்களிடம் என்ன உள்ளதென்று பாருங்கள் – பெரிய நிகழ்ச்சிகள், தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் போன்றவை. தேவனுக்கு பதில் கூறுவதைத் தவிர என்னிடம் வேறொன்றுமில்லை" என்றேன்.

அவர், "நான்–நான்–நான்... உங்கள் ஊழியத்தை நீங்கள் பாழாக்கிக் கொள்ளப் போகின்றீர்கள்" என்றார்.

நான், "தேவனுடைய வார்த்தை பாழாக்கும் எந்த ஊழியமும் பாழாக்கப்பட வேண்டியதே" என்றேன். அது உண்மை! நிச்சயமாக. அது முற்றிலும் உண்மை! அவர், "நல்லது, நீங்கள் அதை பாழாக்கி விடுவீர்கள்" என்றார்.

74. நான், "அப்படியானால் யார் அதை அவர்களுக்கு எடுத்துக் கூறுவது? (பாருங்கள்?) யாராகிலும் ஒருவர் அதை எடுத்துக் கூறவேண்டும். சத்தியம் எதுவோ அதற்கு, அது மனம்நோகச் செய்தாலும் யாராகிலும் ஒருவர் உறுதியாக நிற்கவேண்டும்" என்றேன். நண்பர்களே, கிறிஸ்தவர்கள் என்னும்

முறையில், நாம் பரலோகத்துக்கு செல்லப் போகின்றோம் என்று விசுவாசிக்கும் மக்களாயிருப்பதால், பரிசுத்த ஆவியானவரே நம்மை தேவனுடைய வார்த்தைக்கு கொண்டு வருவார்.



அவர், "நீங்கள் என்ன செய்யவேண்டும் தெரியுமா? நீங்கள் தீர்க்கதரிசியென்று மக்கள் விசுவாசிக்கின்றனர். எனவே இந்த சிறு

செயல்களைக்கண்டு நீங்கள் குறை கூறுவதற்குப் பதிலாக தீர்க்கதரிசன வரங்களைப் பெறுவது எப்படியென்று நீங்கள் பெண்களுக்கு கற்றுத்தர வேண்டும்" என்றார்.



75. நான், "மொழியின் முதலெழுத்துக்களாகிய அ, ஆ, இ யைக் கற்க மறுக்கும் இவர்களுக்கு என்னால் எப்படி அல்ஜீப்ரா கணிதத்தை கற்றுத்தர முடியும்? சாதாரண, இயற்கையான காரியங்களை செய்ய மறுக்கும் இவர்களுக்கு மேலான காரியங்கள் எப்படி நீங்கள் போதிக்க முடியும்? அவர்கள் கீழிருந்து தொடங்கவே மறுக்கின்றனரே" என்றேன். நீங்கள் ஏணியில் முதல் படியில் காலெடுத்து வைக்காமல், உச்சப்படியை அடைய முயல்கின்றீர்கள். அதனால்தான் நீங்கள் விழுந்து போகின்றீர்கள். பாருங்கள்?

நீங்கள் கீழே தொடங்கி, தேவன் உங்களை மேலே வழிநடத்தும் விதமாகவே, மேலேறிச் செல்லுங்கள். பாருங்கள்?

உங்கள் வாழ்க்கையை நீங்கள் சரிவர அமைத்து கொண்டு, தேவன் உங்களுக்கு நியமித்துள்ளபடியே வார்த்தையின் ஒவ்வொரு அம்சத்தையும் பின்பற்றுங்கள்.



76. இப்பொழுது சிந்தித்துப் பாருங்கள், தேவன் எப்படி... நாம் கிறிஸ்தவர்களைப் போல் நடந்து கொள்ள வேண்டும். நமது நடத்தை கிறிஸ்தவர்களின் நடத்தையைப்போல்


இருக்க வேண்டும். நாம் இங்கு அந்நியராயிருக்கிறோம். இது நம்முடைய வீடல்ல. இல்லவே இல்லை. நாம் இங்கு தற்காலிகமாகவே வைக்கப்பட்டிருக்கிறோம். நாம் ஒவ்வொருவரும் இங்கிருந்து செல்ல வேண்டியவர்களாயிருக்கிறோம்.



★★★★★

*(குறிப்பு: இந்தச் சிறு புத்தகத்திலுள்ள படங்கள் அனைத்தும் இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டுள்ளன. நன்றி.)*

# இரட்சிக்கப்பட்ட ஒரு மனைவி தன் கணவர் பாவியாயிருந்தால் அவர் அணுகினால் மறுக்க வேண்டுமா?



## வில்லியம் மரியன் பிரன்ஹாம்

---

செய்தி: 64-08-23E

# கேள்விகளும் பதில்களும் COD #21

---

**இரட்சிக்கப்பட்ட ஒரு மனைவி தன் கணவர் பாவியாயிருந்தால் அவர் அணுகினால் மறுக்க வேண்டுமா?**


இல்லை, ஐயா! இல்லை ஐயா! அவர் உன் கணவர். அவ்விதம் செய்வதனால் அவரை தேவனிடத்திலிருந்து அதிக தூரம் துரத்தி விடுவாய். பார்? அது

உண்மை. சகோதரனே, சகோதரியே, நீ அவரை விவாகம் செய்து கொண்டாய், அவர் உன்னுடையவர். நீ அவருடையவள்.

★★★★★


THE CALL
OF SAMUEL
Only believe,
Only believe
All things are
possible,
Only believe.




Only believe,
Only believe
All things are
possible,
Only believe.


Only believe,
Only believe
All things are possible,
Only believe.
AN OLD FAVORITE

Only believe, Only believe
All things are possible, Only believe.


சகோ. பினேகாஸ்
போன்: 8838623242, 9551855108
Email: jebakumarsa@gmail.com
www.thefinish.in